DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.39/2023**

**2026-ம் ஆண்டு மே திங்கள் 15-ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.17-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 17 | தொழில் | - | **காவல் ஆய்வாளர்** |
| பெயர் | - | **திருமதி. கற்பகம்** | வட்டம் | - | சென்னை |
| க/பெ | - | **சங்கரன்** | சமயம் | - | |
| கிராமம் | - | **கோட்டுர்புரம் குற்றபிரிவு காவல் நிலையம் சென்னை** | வயது | - | 50/2026 |
| சாதி | - | | | | |

**15.05.2026**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது, சென்னை கோட்டுர்புரம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக இருந்து வருகிறேன். கடந்த 20.01.2023-ம் தேதி நான் வால்பாறை காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.10/2023, சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) இ.த.ச. வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே சாட்சி நந்தக்குமார் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் காலை 08.00 மணிக்கு சம்பவயிடமான சின்கோனா, நல்லகாத்து பிரிவு அருகிலுள்ள தொழிலாளர் குடியிருப்பு அருகில் கிளமேன்ட், நாராயணசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு,

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.11-ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், சாட்சிகள் கிளமேன்ட், நாராயணசாமி ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி, சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான ராஜேந்திரன், பிரமிளா ஆகியோர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், மேற்படி சம்பவத்தின் இறந்த நபருடன் இருசக்கர வாகனமான TN 37 CZ 2017 வாகனத்தில் பயணம் செய்த அஸ்வின் என்பவரையும் விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், இறந்த நபரின் அம்மா காளியம்மாள், அப்பா சுரேஷ், சித்தி ஜெயஸ்ரீ, மாமா ஜெயகணேஷ் ஆகியோர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், சம்பவ நேரத்தின் மேற்படி, இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற எதிரி மணிகண்டன் (எ) அப்பு அவர்களை தேடி வந்தேன். மேலும், இறந்த மணிகண்டன் பிரேதத்தின் மீது 20.01.2023-ம் தேதி வால்பாறை அரசு மருத்துவமனை பிரேத கிடங்கில் இருந்த பிரேதத்தை காலை 10.15 மணியளவில் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் ஸ்டெல்லா, ரவிக்குமார் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள சாட்சிகள் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.13-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பிரேதத்தை காவலர் 820 சதீஸ்குமார் மூலம் மருத்துவர் நித்யா அவர்களிடம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தேன். மேலும், மேற்படி விபத்தில் காயமான புகார்தாரரான நந்தக்குமார் மற்றும் உடன் பயணித்த அஸ்வின் ஆகியோருக்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணக்குமார் மற்றும் மருத்துவர் சதீஸ்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். மேற்படி, 24.01.2023-ம் தேதி இரவு 19.00 மணிக்கு எதிரி மணிகண்டன் (எ) அப்பு என்பவர் வால்பாறை காவல் நிலையத்தில் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து, தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். பின்னர், மேற்படி விபத்திற்குள்ளான இருசக்கர வாகனமான TN 37 CZ 2017 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு கடந்த 02.02.2023-ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் ரவிக்குமார் அவர்களிடம் ஒப்புவித்து, மேற்படி வாகனத்தின் ஆய்வறிக்கையை பெற்றேன். பின்னர், 26.03.2023-ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் நித்யா அவர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர், காவலர் 820 சதீஸ்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பணியிட மாறுதல் காரணமாக வேறு காவல் நிலையத்திற்கு சென்றதால் வழக்கு கோப்பை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதி 19.01.2023-ம் தேதி 18.30 மணி என்றால் சரிதான். தகவல் எத்தனை மணிக்கு கிடைக்கப்பெற்றது என்றால் அதே தேதி 19.45 மணிக்கு பாதிக்கப்பட்ட நபர் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 20.01.2023-ம் தேதி காலை 07.00 மணிக்கு 11.30 மணி நேரம் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் காலதாமதத்திற்கான காரணத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. விபத்திற்குள்ளான வாகனத்தை 15 நாட்கள் காலதாமதமாக 02.02.2023-ம் தேதி மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த நாளில் இருந்து மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்படும் நாள் வரை விபத்திற்குள்ளான வாகனம் யாருடைய பொறுப்பில் இருந்தது என்றால் காவல் நிலைய பொறுப்பில் இருந்தது. மோட்டார் வாகன ஆய்வாளர் பொள்ளாச்சியில் இருந்து வால்பாறைக்கு குறிப்பிட்ட நாட்கள் மட்டும் தான் வால்பாறையில் உள்ள கிளை அலுவலகத்திற்கு வருவார்கள். அதனால் வாகன ஆய்வுக்கு உட்படுத்த 15 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. விபத்து நடந்த இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு வாகனத்தை யார் எடுத்து வந்தது என்றால் நான் சம்பவம் நடந்த மறுநாள் சம்பவயிடத்தை பார்வையிட செல்லும் போது, விபத்திற்குள்ளான வாகனம் அந்த இடத்தில் ரோட்டின் ஓரமாக கிடந்தது நான் தான் காவலர்களை வைத்து காவல் நிலையம் கொண்டு வந்தேன். சம்பவயிடத்தில் விபத்திற்குள்ளான வாகனம் கிடந்ததாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சம்பவயிடம் சென்றிருந்தால் வாகனம் கிடந்ததை பார்வை மகஜரில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் மகேஷ் என்பவரை மருத்துவர் நித்யா பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றால் சரியல்ல. புலன் விசாரணை சரிவர செய்யாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்து நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி BA., BL.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.